டிசம்பர் 19

## *முக்திப்பேறு 5-ஆம் உர்பன் (1310 – 1370)*

இவரது பழைய பெயர் வில்லியம். இவர் மார்சேய் நகரில் ஒரு மடத்தின் தலைவராக இருந்தார். பாப்புமார், அவிஞான் நகரில் இருந்த பொழுது இவர் இருமுறை பாப்புவின் பிரதிநிதியாக இத்தாலியா நாட்டிற்குச் சென்று 1362-ஆம் ஆண்டில் பாப்பு ஆனார். உர்பன் என்னும் பெயரை எடுத்துக் கொண்டார். இவர் புண்ணியவான். 1336-ஆம் ஆண்டு உரோமைக்கு தலைமை ஸ்தானத்தை மாற்றிக் கொண்டதை பிரான்ஸ் நாட்டின் மன்னரும் அந்நாட்டைச் சேர்ந்த கர்தினால்களும் எதிர்த்தார்கள். இவரை கைவிட்டு விடுவதாக கர்தினால்கள் அச்சுறுத்தினார்கள். இவரோ அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை.

உரோமையில் பாழடைந்து கிடந்த பேராலயங்களை புதுப்பித்தார். வேலையின்றி இருந்த மக்களுக்கு ஏராளமான உதவி செய்தார். குருக்களிடையே கட்டுப்பாட்டை ஏற்படுத்தி விசுவாசிகளை பக்தியுள்ளவர்களாக்கினார். வேதபோதகர்களை இந்தியாவுக்கும் சீனாவுக்கும் அனுப்பினார். உயர் இடங்களில் காணப்பட்ட ஊழல்களை ஒழிக்க முயன்றார். இன்னும் இவர் சந்நியாச உடையை தரித்திருந்தார். பல உயர் கல்வி ஸ்தாபனங்களை நிறுவி ஏழை மாணவர்களுக்கு இலவசமாக கல்வி கற்பித்தார்.

ஜெர்மனி நாட்டின் பேரரசன் 4-ஆம் சார்லஸ் உரோமைக்கு வந்த போது பாப்புவை மிக மிக மகிமைப்படுத்தினார். பாப்பு ஏறியிருந்த குதிரையை வெறுங்காலுடன் தான் நடந்து, நடத்திச் சென்றார்.

இத்தாலியா நாட்டில் பொறாமையினாலும், போட்டியினாலும் குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது. ஐரோப்பாவின் எதிரிகளான மகமதியர்களை முறியடிக்க கிறிஸ்தவர்கள் ஒன்று சேரவில்லை. இதைப்பற்றி கவலைப்பட்ட பாப்பானவர் அவிஞன் நகருக்குச் செல்ல தீர்மானித்ததை பலரும் தடுத்தார்கள். அவர் அங்கு சென்றால் சீக்கிரம் இறந்து விடுவார் என்று புனித பிரிஜிட் அம்மாள் முன்னறிவித்தாள். பாப்பு அங்கு பொய் சில மாதங்களுக்குப் பின் இறந்தார்.

**சிந்தனை:**

இவர் ஐரோப்பாவில் ஏராளமான நன்மைகளைச் செய்திருந்தும் திருப்தி அடையவில்லை. தூர நாடுகளில நன்மை செய்யும்படி வேத போதகர்களை அனுப்பினார். நாம் செய்யும் சொற்ப நன்மையுடன் திருப்தி அடையக் கூடாது. மென்மேலும் நன்மை செய்ய வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, அகில உலகின் மக்களும் என் சகோதரர்கள் என்னும் உண்மையை மனதில் வைத்து அனைவருக்கும் நன்மை செய்யும் வரம் தாரும்.